1989 ஏப்ரல், 25]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை உணர்ந்து இதைப் போன்ற சாக்கடைகளை சீர் செய்ய இயந்திர மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து நான் முன்பே வினாவிற்குப் பதிலளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். இங்கிலாந்திலிருந்து நவீனக் கருவிகள் வரவழைக்கப்பட்டு இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. இறந்துபோன துப்புரவு ஊழியர் ஏழுமலையின் குடும்பம் குறித்து இந்த அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கிறது. ஆனால் அவர் அங்கே தற்காலிகமாகப் பணியாற்றியவர். அந்த அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இந்த சோக நிகழ்ச்சியைக் கருதி வாரியம் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருக்கிறது. ஆனால் இருக்கிற சங்கடம் அவர் நிரந்தர ஊழியர் அல்ல, தற்காலிக ஊழியர். நிரந்தர ஊழியருக்கு வழங்குவது போல இவருக்கும் 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவருடைய குடும்பத்தினர் சார்பில் கேட்டிருக்கிறார்கள். ஆனால் வாரியம் தான் இது குறித்து முடிவு செய்யும். வாரியம் முடிவு செய்ததற்குப் பிறகு அரசுக்கு அனுப்பினால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து அது குறித்து அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருப்பத்தூர்த் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—4—1989 ஞாயிற்றுக்கிழமை அன்று என்னுடைய தொகுதியான திருப்பத்தூரில் நில நடுக்கம் ஏற்பட்டது. திருப்பத்தூர் நகரில் மட்டுமல்லாமல் ஜவ்வாது மலை, ஏலகிரி அடிவாரம் மற்றும் அங்கிருக்கிற கிராமங்களில் எல்லாம் நில நடுக்கம் ஏற்பட்டதால் அந்தப் பகுதிகளிலுள்ள கட்டிடங்கள் எல்லாம் இடிபாடுகளுக்கு ஆளாகியிருக்கின்றன. ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்பு கூட இதுபோன்ற நில நடுக்கம் ஏற்பட்டது. இதை முன்கூட்டியே இனிமேல் மக்களுக்கு தெரியப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில நடுக்கங்கள் பல இடங்களில் ஏற்படுகின்றன. ஆனால் இதுவரையில் முன்கூட்டியே அறிவிக்கின்ற எந்த ஒரு நிலையிலும் எந்த ஓர் அரசும் அப்படி இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. எனவே அப்படி வேறு யாராவது முன்கூட்டியே அறிவிக்கின்ற சாதனங்களைப் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் அதைத் தமிழக அரசும் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.